தினமணி
எமது செய்தியாளர்களை தொடர்புகொள்ள
கோவை 94425 04156
மேட்டுப்பாளையம் 94878 42563
பெ.நா.பாளையம் 98425 63953
சூலூர் 98422 44599
அன்னூர் 91502 49095
பொள்ளாச்சி 89034 44119
வடவள்ளி 98436 52523
வால்பாறை 94863 24619

தினமணி
சந்தா குறித்த விவரம் மற்றும் புகார்களுக்கு...
கோயம்புத்தூர் : 97902 12447
மேட்டுப்பாளையம் & அன்னூர் : 77088 26235
சூலூர் : 73730 55255
மதுக்கரை : 88701 48269
பொள்ளாச்சி : 90435 00177
உதவி மைய எண் : 88070 00216

# அரசு மருத்துவமனையில் போலியோ சொட்டு மருந்து முகாம்

## அமைச்சர் வி.சம்பத்குமார் தொடங்கிவைத்தார்

**கோவை, ஜூன் 28:** கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தேசிய போலியோ சொட்டு மருந்து முகாமை, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் வி.சம்பத்குமார் ஞாயிற்றுக்கிழமை தொடங்கிவைத்தார்.

நிகழ்ச்சிக்கு மாவட்ட வருவாய் அலுவலர் ச.மதுராந்தகி, அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை முதல்வர் கீதாஞ்சலி, லால்குடி சட்டப்பேரவை உறுப்பினர் லீமாரோஸ் மார்ட்டின் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்வில், அமைச்சர் வி.சம்பத்குமார் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கோவை மாவட்டத்தில் கிராமப்புறங்களில் 1,124 மையங்கள், நகர்ப்புறங்களில் 491 மையங்கள் என மொத்தம் 1,615 போலியோ சொட்டு மருந்து மையங்கள் அமைக்கப்பட்டு மருந்து கொடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும், பேருந்து நிலையம், ரயில் நிலையம், விமான நிலையம் மற்றும் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்க 32 மையங்கள் மற்றும் 22 நடமாடும் மையங்கள் சிறப்பு மையங்களாக அமைக்கப்பட்டு சொட்டு மருந்து வழங்கப்பட்டது என்றார்.



கோவை அரசு மருத்துவமனையில் போலியோ சொட்டு மருந்து முகாமைத் தொடங்கிவைத்த அமைச்சர் வி.சம்பத்குமார்.

இந்நிகழ்வில், இணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) சுமதி, மாவட்ட சுகாதார அலுவலர் பாலுசாமி, மாவட்ட உணவுப் பாதுகாப்பு நியமன அலுவலர் அனுராதா, கோவை மாநகராட்சி மாநகர நல அலுவலர் சுபாஷ்காந்தி, இருப்பிட மருத்துவ அலுவலர் சரவணபிரியா, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை துறைத் தலைவர் (குழந்தைகள் நலம்) சசிகுமார் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இதேபோல, கோவை மாநகராட்சி, ஆர்.எஸ்.புரத்தில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாமை அமைச்சர் வி.சம்பத்குமார் தொடங்கிவைத்தார். மேயர் கா.ரங்கநாயகி, மாநகராட்சி ஆணையர் கட்டா ரவிதேஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்வில், போலியோ சொட்டு மருந்து குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும்வகையில் அங்குவைக்கப்பட்டிருந்த தற்படம் பகுதியில் அமைச்சர் புகைப்படம் எடுத்து மருத்துவமனை வளாகத்தில் மரக்கன்றுகளை நடவு செய்தார். மேலும், போலியோ சொட்டு மருந்து எடுத்துக் கொண்ட குழந்தைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் மற்றும் மரக்கன்றுகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், துணை மேயர் ரா.வெற்றிச்செல்வன், துணை ஆணையர் ர.சரஸ்வதி, பொது சுகாதார குழுத்தலைவர் பெ.மாரிச்செல்வன், மாவட்ட சுகாதார அலுவலர் பெ.பாலுசாமி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# கோவை தமிழருக்கு விருது



உலக சாதனை படைத்ததற்காக சர்வதேச விருதைப் பெற்ற கோவையைச் சேர்ந்த சமூக ஆர்வலர் ஜி.டி.விஷ்ணுராம்.

**கோவை, ஜூன் 28:** பெண்கள் பாதுகாப்பு மற்றும் போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வுக்காக சைக்கிள் பயணம் மேற்கொண்டு உலக சாதனை படைத்த கோவையைச் சேர்ந்த சமூக ஆர்வலரும், சைக்கிளிஸ்டுமான ஜி.டி.விஷ்ணுராமுக்கு சர்வதேச விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

லண்டன் 'வேர்ல்டு புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ்' அமைப்பின் சார்பில் பிரிட்டன் நாடாளுமன்றத்தின் ஹவுஸ் ஆஃப் காமன்ஸ் வளாகத்தில் சர்வதேச விருது வழங்கும் விழா நடைபெற்றது. உலக அளவில் 10-க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த சாதனையாளர்கள் பங்கேற்ற இந்நிகழ்வில், தென்னிந்தியாவிலிருந்து தேர்வு செய்யப்பட்டு விருது பெற்ற ஒரே நபர் ஜி.டி. விஷ்ணு ராம் என்பது குறிப்பிடத்தக்கது.

சமூக ஆர்வலர் ஜி.டி.விஷ்ணு ராம், பெண்கள் பாதுகாப்பு மற்றும் போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வை வலியுறுத்தி, சமீபத்தில் தனுஷ்கோடி முதல் கோவை வரையிலான 500 கிலோ மீட்டர் தொலைவை வெறும் 15 மணி நேரம் 8 நிமிஷங்களில் சைக்கிள் மூலம் மிக வேகமாக கடந்து உலக சாதனை படைத்தார்.

# மேட்டுப்பாளையத்தில் 12,959 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து

## என்.சுனில் ஆனந்த் எம்.எல்.ஏ. தொடங்கிவைத்தார்

**மேட்டுப்பாளையம், ஜூன் 28:** மேட்டுப்பாளையத்தில் 12,959 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கும் திட்டத்தை சட்டப்பேரவை உறுப்பினர் என்.சுனில் ஆனந்த் தொடங்கிவைத்தார்.

தமிழகம் முழுவதும் 5 வயதுக்கு உள்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதையொட்டி, மேட்டுப்பாளையம் சட்டப்பேரவைத் தொகுதிக்கு உள்பட்ட காரமடை ஊராட்சி ஒன்றியத்தில் 17 ஊராட்சிகள், மேட்டுப்பாளையம், காரமடை நகராட்சிகள், சிறுமுகை பேரூராட்சி என மொத்தம் 175 பூத்துகளில் 12,959 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டது.

மேலும், சுகாதாரத் துறை சார்பில் பேருந்து நிலையம், மார்க்கெட், திரையரங்கு, வணிக வளாகங்கள், அரசு மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையம், துணை சுகாதார நிலையம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.



மேட்டுப்பாளையம் பேருந்து நிலையத்தில் குழந்தைக்கு போலியோ சொட்டு மருந்து வழங்குகிறார் என்.சுனில்ஆனந்த் எம்.எல்.ஏ.

முன்னதாக மேட்டுப்பாளையம் பேருந்து நிலையத்தில் நடைபெற்ற போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாமை சட்டப்பேரவை உறுப்பினர் என்.சுனில் ஆனந்த் தலைமை வகித்து தொடங்கிவைத்தார். பின்னர் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கினார்.

# பராமரிப்புப் பணி: கேரள ரயில்கள் தாமதமாக இயக்கம்

**கோவை, ஜூன் 28:** ஈரோடு – சேலம் ரயில் பாதை இடையே மகுடஞ்சாவடி – வீரபாண்டி சாலை பகுதியில் பொறியியல் பராமரிப்புப் பணி மேற்கொள்ளப்படுவதால், கேரள ரயில்கள் தாமதமாக இயக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, சேலம் ரயில்வே கோட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

பொறியியல் பராமரிப்புப் பணிகள் காரணமாக ஜூன் 29 மற்றும் ஜூலை 1-ஆம் தேதிகளில் எர்ணாகுளத்தில் இருந்து காலை 7.15 மணிக்கு போத்தனூர், சேலம், ஜோலார்பேட்டை வழியாக இயக்கப்படும் எர்ணாகுளம் – டாடா நகர் விரைவு ரயில் (எண்: 18190) 50 நிமிஷங்கள் தாமதமாக இயக்கப்படும்.

இதேபோல, ஜூன் 29, ஜூலை 1 ஆகிய தேதிகளில் ஆலப்புழையில் இருந்து காலை 6 மணிக்கு கோவை, சேலம், ஜோலார்பேட்டை வழியாக இயக்கப்படும் ஆலப்புழை – தன்பாத் விரைவு ரயில் (எண்: 13352) 20 நிமிஷங்கள் தாமதமாக இயக்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இருசக்கர வாகனம் மீது அரசுப் பேருந்து மோதி முதியவர் உயிரிழப்பு

**கோவை, ஜூன் 28:** கோவை ரத்தினபுரி பகுதியில் இருசக்கர வாகனம் மீது அரசுப் பேருந்து மோதியதில் முதியவர் உயிரிழந்தார்.

கோவை ரத்தினபுரி சம்பத் தெருவைச் சேர்ந்தவர் ஜெயக்குமார் (74). இவர் தனது இருசக்கர வாகனத்தில் சனிக்கிழமை இரவு சென்று கொண்டிருந்தார். அப்போது, அந்த வழியாக வந்த அரசுப் பேருந்து ஜெயக்குமாரின் இருசக்கர வாகனத்தின் மீது மோதியது. இதில் நிலைதடுமாறி கீழே விழுந்த ஜெயக்குமாரின் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு, அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இதுதொடர்பாக கோவை போக்குவரத்து புலனாய்வு கிழக்கு பிரிவு போலீஸார் வழக்குப் பதிவு செய்து, பேருந்து ஓட்டுநரான கள்ளக்குறிச்சி மாவட்டம், சோமந்தார்குடி பகுதியைச் சேர்ந்த கதிரேசன் (59) என்பவரைக் கைது செய்தனர்.

# இன்றைய மின்தடை: ஒத்தக்கால்மண்டபம்

**கோவை, ஜூன் 28:** கோவை மாவட்டம், ஒத்தக்கால்மண்டபம் துணை மின் நிலையத்தில் நடைபெறவுள்ள மாதாந்திர பராமரிப்புப் பணிகள் காரணமாக கீழ்க்கண்ட பகுதிகளில் திங்கள்கிழமை (ஜூன் 29)காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை மின் விநியோகம் நிறுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மின்தடை ஏற்படும் பகுதிகள்:** மலுமிச்சம்பட்டி (ஒரு பகுதி), ஏழூர் பிரிவு, அரிசிபாளையம் (ஒரு பகுதி), ஒத்தக்கால்மண்டபம், ஒக்கிலிபாளையம், பிரிமியர் நகர், மயிலேறிபாளையம், மாம்பள்ளி, பெரியகுயிலி, ஓராட்டுக்குப்பை, தேகானி, செட்டிபாளையம்.

# ஜூலை 1-இல் நீலாம்பூரில் மின்தடை

**கோவை, ஜூன் 28:** கோவை மாவட்டம், நீலாம்பூர் துணை மின் நிலையத்தில் நடைபெறவுள்ள மாதாந்திர பராமரிப்புப் பணிகள் காரணமாக கீழ்க்கண்ட பகுதிகளில் ஜூலை 1-ஆம் தேதி காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை மின் விநியோகம் நிறுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மின்தடை ஏற்படும் பகுதிகள்:** நீலாம்பூர், முதலிபாளையம், செரயாம்பாளையம், வெள்ளானைப்பட்டி, பவுண்டரி அசோசியேஷன்.

# கஞ்சா, போதை மாத்திரை விற்பனை: 4 பேர் கைது

**கோவை, ஜூன் 28:** கோவையில் கஞ்சா, போதை மாத்திரை விற்பனை செய்ததாக 4 பேரை போலீஸார் கைது செய்தனர்.

கோவை சிங்காநல்லூர் பகுதியில் போலீஸார் வாகனச் சோதனையில் ஞாயிற்றுக்கிழமை ஈடுபட்டனர். அப்போது, அந்த வழியாக சந்தேகத்துக்கு இடமளிக்கும் வகையில் இருசக்கர வாகனத்தில் வந்த ஒருவரைப் பிடித்து சோதனை நடத்தினர். அவர் 4 கிலோ 200 கிராம் கஞ்சாவை சாக்குப் பையில் வைத்துக் கடத்தியது தெரியவந்தது.

விசாரணையில், அவர் பிகார் மாநிலம், மதுபனி மாவட்டத்தைச் சேர்ந்த லால் பிகாரி யாதவ் மகன் உமேஷ் (26) என்பது தெரியவந்தது. கட்டடத் தொழிலாளியான இவர், பிகாரில் இருந்து ரயில் மூலம் கஞ்சாவை கடத்தி வந்து, கோவையில் விற்பனை செய்ய முயன்றது தெரியவந்தது. இதையடுத்து, சிங்காநல்லூர் போலீஸார் உமேஷைக் கைது செய்து, அவரிடமிருந்த கஞ்சா மற்றும் இருசக்கர வாகனத்தை பறிமுதல் செய்தனர்.

கோவை சாய்பாபா காலனி பகுதியில் கஞ்சா விற்ற தேவாங்கா நகரைச் சேர்ந்தவெங்கடேஷ்(35)மற்றும்காந்தி பார்க் பகுதியைச் சேர்ந்த ஆகாஷ் (22) ஆகிய இருவரை சாய்பாபா காலனி போலீஸார் கைது செய்து, அவர்களிடம் இருந்து 1 கிலோ 200 கிராம் கஞ்சாவைப் பறிமுதல் செய்தனர்.

கோவை ரத்தினபுரி சாஸ்திரி வீதி பகுதியில் போலீஸார் சனிக்கிழமை ரோந்து சென்றனர். அப்போது, அந்தப் பகுதியில் தங்கி தொழிலாளியாக வேலை பார்த்து வரும் நாகாலாந்து மாநிலத்தைச் சேர்ந்த கைமின்மாங் சிங்சன் (22) என்பவர் அரசால் தடை செய்யப்பட்ட 'பைவோன் ஸ்பாஸ் பிளஸ்' என்ற போதை மாத்திரைகளை விற்றது தெரியவந்தது.

இதையடுத்து, கைமின்மாங் சிங்சனை ரத்தினபுரி காவல் ஆய்வாளர் புஷ்பாராணி கைது செய்து, அவரிடமிருந்து 28 போதை மாத்திரைகளை பறிமுதல் செய்தார்.




கோவை மைல்கல்லில் இருந்து மாதம்பட்டி செல்லும் மேற்கு புறவழிச் சாலை அருகே மேற்குத் தொடர்ச்சி மலையில் வானில் காணப்பட்ட மேக அலை.

# மேட்டுப்பாளையம் அருகே சிறுத்தை தாக்கி முதியவர் உயிரிழப்பு

**மேட்டுப்பாளையம், ஜூன் 28:** கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் அருகே மூனுக்குட்டை மலைக் கிராமத்தில் சிறுத்தை தாக்கியதில் முதியவர் வெள்ளியங்கிரி உயிரிழந்தார்.



மேட்டுப்பாளையம் அருகே பெரியநாயக்கன்பாளையம் வனச் சரகத்துக்கு உள்பட்ட மூனுக்குட்டை மலைக் கிராமத்தைச் சேர்ந்தவர் வெள்ளியங்கிரி (62). இவர் தனது ஆடுகளுக்காக கிராமத்தின் அருகே உள்ள வனப் பகுதியில் இலை தழைகளைச் சேகரிக்க சனிக்கிழமை சென்றவர் வீடு திரும்பாததால் சந்தேகமடைந்த குடும்பத்தினர் அவரைத் தேடி ஞாயிற்றுக்கிழமை காலை சென்றுள்ளனர்.

அப்போது வனப் பகுதியில் உள்ள புதருக்குள் அவரது உடல் சிதைந்து காணப்பட்டது. இது குறித்து பெரியநாயக்கன்பாளையம் வனத் துறையினருக்கு உடனடியாகத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

தகவலறிந்து சம்பவ இடத்துக்கு வந்த மேட்டுப்பாளையம் சட்டப்பேரவை உறுப்பினர் என்.சுனில் ஆனந்த் முதியவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். பின்னர், வனத் துறையினர், காரமடை போலீஸார் முன்னிலையில் வெள்ளியங்கிரி உடல் மீட்கப்பட்டு உடற்கூறாய்வுக்காக மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

முதியவரின் உடல் அருகே சிறுத்தை கால்தடம் இருந்ததாகக் கூறப்படும் நிலையில், முதியவரை சிறுத்தை தாக்கி அவரது உடலை சாப்பிட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

எனவே, சிறுத்தை நடமாட்டத்தைக் கண்காணித்து கூண்டுவைத்துப் பிடிக்க வனத் துறையினர் நடவடிக்கை எடுக்க கிராம மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

DTCP APPROVAL
BUILDING & LAYOUT (Plan & Approval)
LAND CONVERSION
HACA NOC (Clearance)
KOVAI PLANNERS
No: 03, PMP Complex, Gandhi Maanagar, Opp. Indian Oil Petrol Bunk, Coimbatore - 641 004.
84284 32345
87538 75387

R.M.K. COLLEGE OF ENGINEERING AND TECHNOLOGY (AN AUTONOMOUS INSTITUTION)
TNEA Code 1128
14th Graduation Day
2025 BATCH STUDENTS
Monday, 29th June, 2026 | 10.30 am | RMKCET Auditorium
Chief Guest
Mr. Babukannan Balakrishnan
Senior Director, Silicon BU, Tech Mahindra Ltd., Bangalore
will deliver the Graduation Day Address
Vidya Ratna, Thiru. R. S. Munirathinam Ex. MLA.
Founder - Chairman, RMK Group of Institutions will preside and deliver the Presidential Address
RMK GROUP OF INSTITUTIONS

BHARAT HEAVY ELECTRICALS LIMITED
Tiruchirappalli – 620014
(A Govt. of India Undertaking)
REQUIREMENT OF SUPPLIERS FOR STEEL FABRICATION AND SUPPLY OF OTHER ITEMS
BHEL, Tiruchirappalli invites new Suppliers for the following:
- Fabrication of steel items / boiler components under with BHEL material / with Vendor's material categories for various projects (Dept.: Outsourcing - OS).
- Supply of various items listed in BHEL website (Dept.: Materials Management - MM).
Full details can be downloaded from BHEL's website https://www.bhel.com (Tender Notifications page) against ref. No.: NIT_100769 . Application for Supplier registration is to be submitted in Online portal by visiting https://supplier.bhel.in and by selecting the respective Unit.
All corrigenda / addenda / amendments/ clarifications etc. to the above will be hosted on the above websites only and will not be published in any other media. Suppliers should regularly visit the above websites to keep themselves updated.
GM / OS, 0431 – 2574242, ves@bhel.in,
GM / MM, 0431 – 2574074, pspandi@bhel.in

ENROLLMENT NOTICE
After ten days of the publication of this notice and within three months thereafter I, JAYASHREE S, D/o. SIVALINGAM M, Aged 22 Years, Permanently residing at No.105/3, Nehru Nagar, Pasumpon Nagar, 3rd Street, Ramanathapuram, Coimbatore - 641 045, intend having my enrollment as an Advocate moved before the Bar Council of Tamilnadu and Puducherry, Bar Council Buildings, High Court Campus, Chennai - 104. Those who have any valid objections may, notify the same to the Bar Council within 10 days.
JAYASHREE S, Ph.9842108657

MANAPPURAM FINANCE LTD.
CIN: L65910KL1992PLC006623.
Registered Office: W - 4/ 638A, Manappuram House, P.O. Valapad, Thrissur - 680 567, Kerala, India
தங்க நகைகள் பொது ஏலம்
நகைகளை அடமானம் வைத்திருப்போர் மற்றும் குறிப்பாக பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கண்ட கணக்குகளில் அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளுக்கான பொது ஏலம் கீழ்க்கண்ட கிளைகளில் 16.07.2026 தேதி அன்று காலை 10 மணி யில் இருந்து நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.தங்க நகைகளை மீட்க தவறிய வாடிக்கையாளர்களின் நகைகளை, அவர்களுக்கு பதிவு தபால்கள் அனுப்பிய பிறகும், நினைவுபடுத்திய பிறகும், நாங்கள் தங்க நகைகளை ஏலம் விடுகிறோம். ஏலம் போகாத தங்க நகைகளை எவ்வித முன்னறிவிப்பின்றி எந்த ஒரு இதர நாளிலும் ஏலம் விடப்படும். ஏலம் விடப்படும் இடம் அல்லது தேதியில் ஏதேனும் மாற்றங்கள் (இருந்தால்) அவை பற்றிய அறிவிப்பு ஏலம் நடக்குமிடத்தில் எழுதி வைக்கப்படும் மற்றும் இணையதளத்தில் வெளியிடப்படும்.வேறு எந்த முன்னறிவிப்பும் அளிக்கப்படாது.
அடமானங்களின் பட்டியல் :
கோயம்புத்தூர், அண்ணூர் கோயம்புத்தூர், 0121550730018158, சின்னமயபாளையம், 0133400700021595, சிந்தாமணிபுதூர், 0129730700022523, ஈச்சனேரி கோயம்புத்தூர், 0125100700037140, ஒப்பணக்கார கோயம்புத்தூர், 0100520700084241, பல்லடம், 0101480700083933, பீளமேடு கோயம்புத்தூர், 0127800700029091, 0133, 0127800730016681, சாரதா மில் ரோடு சுந்தரபுரம், 0108570700066610, 0108570730011201, சிவணந்தபுரம் சரவணம்பட்டி, 0112940700046641, துடியலூர், 0114310700038238, ஈரோடு, அந்தியூர் ஈரோடு, 0114630700066971, 6998, அப்பக்குடல் ஈரோடு, 0118370700048176, காங்கயம், 0101800730040037, பெருந்துறை ஈரோடு, 0111870730027416, புஞ்சைபுளியம்பட்டி, 0102600700763727, சத்தியமங்கலம் பஸ் ஸ்டாண்டு, 0123310700048648, சிவகிரி ஈரோடு, 0120580700029532, 9533, 9553, 0120580730024060, சூளை ஈரோடு, 0121380700050156, நீலகிரி, குன்னூர், 0101240730017632, 7633, ராமநாதபுரம், திருப்பூர், அனுப்பர்பாளையம், 0111470730043102, காலனி பஸ் ஸ்டாப் திருப்பூர், 0111910700042237, குன்றத்தூர், திருப்பூர், 0117130700031923, முணியப்பன் கோவில் திருப்பூர், 0130730700017458, வீரபாண்டிப்பிரிவு திருப்பூர், 0121820730039597.
மேற்கண்ட ஏலத்தில் பங்கேற்க விரும்பும் நபர்கள் பின்வருவனவற்றைப் பின்பற்ற வேண்டும்: ஆர்வள்ள ஏலதாரர்கள், ஏலம் நடைபெறும் அதே நாளில், ரூ. 10,000/- தொகையை ஈஎம்டி ஆக (வெற்றி பெறாத ஏலதாரர்களுக்குத் திருப்பித் தரப்படும்) என்இஎஃப்டி/ஆர்டிஜிஎஸ் மூலம் செலுத்த வேண்டும். ஏலத்தில் பங்கேற்பவர்கள் செல்லுபடியாகும் அடையாள அட்டை/பான் கார்டை வைத்திருக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 09072607147 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
மணப்புரம் பைனான்ஸ் லிமிடெட்-க்காக

CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institute, Ministry of Education, Govt.of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai-600100.
RECRUITMENT NOTIFICATION FOR ASSOCIATE PROFESSOR
NOTIFICATION No.03/CICT/Professor/2026-2027
Date: 28.06.2026
Central Institute of Classical Tamil, Chennai (CICT) invites applications from Indian Nationals, who fulfill the prescribed qualification, experience, age and other conditions as per the UGC Regulations for filling up the following posts sanctioned on regular basis, as per the details given below:-

| S.No. | Name of the Post | Academic Level | No. of Post | Category | Method of Recruitment |
|---|---|---|---|---|---|
| 1. | Associate Professor | Level 13A of 7th CPC as per UGC | 06 | UR-5 OBC-1 | Direct |

The details of the posts, educational qualification, age, experience and application format are available in the Institute's website www.cict.in. Applications complete in all aspects along with requisite application fee and all necessary documents should reach within 60 days of publication of this advertisement to "The Registrar, Central Institute of Classical Tamil, Chemmozhi Salai, Perumbakkam, Chennai-600100".
Sd/-
Registrar